# வேதங்களில் பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய தொன்மங்கள்

# Myths related to Cosmogony Revealed in Vedas

முனைவர் சயனொளிபவன் முகுந்தன் / Dr.Sayanolibavan Muhunthan[1]


## Abstract

Even before the beginning of philosophical inquiries related to the creation of the Universe, various ideas had prevailed among ancient societies regarding cosmology. These ideas were established in the form of religious myths when the ancient people began to settle down along river deltas as civilised societies. Apart from just being imaginary stories and beliefs, these myths developed into concepts based on the socio-livelihood structure of the said ancient people. Cosmological myths had been in vogue throughout all ancient societies. A myth about lotus is identified in Vedic literature as the mark of the emerging Universe. The evidence of this effect is found in *Maitreya Samhita and Katasamhita*. The origin of the concept of the Universe could be identified from the reference made toward *Hiranyagarbha* (golden egg) in the *Rig Veda Samhita*. The *Hiranyagarbha* (literally, golden embryo/womb/egg) that existed before the creation of Hiranyagarbha was considered the lord of everything in this world and the support of heaven and the earth. Although the facts about him in the Rig Veda are not very clear, the reference to the “golden egg” is consistent. It is worth noticing that this concept has been dealt with in greater detail later in the epics and *Mahapuranas*.



Date of submission: 2022-02-09
Date of acceptance: 2022-03-20
Date of Publication: 2022-07-28


Corresponding author’s Name: Dr.Sayanolibavan Muhunthan Email: smuhunthan@univ.jfn.ac.lk


**Key Words:** Myth, Cosmology, Vedas, Cosmic Ocean, Process of coagulation

### அறிமுகம்

தொன்மங்கள் குறித்த பண்பாட்டுச் சூழமைவுடன் தொடர்புடையவை. அப்பண்பாட்டுப் புலத்துள் கட்டுருவாக்கப்பட்ட தெய்வநம்பிக்கைகள், சமூகத்தலைவர்கள் பற்றிய கருத்தாடல்கள், பிரபஞ்சவியல் பற்றிய சிந்தனைக் கோலங்கள், வாழ்வியற்சடங்குகள் போன்றவற்றுடன் தொடர்புடையவை. அனேக சந்தர்ப்பங்களில் ஒரு தொன்மத்தின் பயில்நிலை என்பது இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் இயைந்து பின்னப்பட்ட சிக்கலான அமைப்புருவாக விளங்கக் காணலாம்.

### ஆய்வு முறையியல்

இவ்வாய்வின் பிரதான ஆய்வு முறையியல் களாக விவரண ஆய்வுமுறையியல், வரலாற்றியல் ஆய்வுமுறைமை மற்றும் ஒப்பாய்வு முறைமை ஆகியன அமைகின்றன. பொருத்தமான சந்தர்ப்பங்களில் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### தொன்மம்

தொன்மம் என்பதன் ஆங்கிலப் பிரதியீடாக ‘Myth’ என்ற சொல்லின் பயில்நிலையை கிரேக்க வரலாற்றாசிரியராகிய ஹெரொடோடஸ் (Herodotas) காலத்திலிருந்து

[1] The author is a Head, Senior Lecturer, Department of Hindu civilization, University of Jaffna. smuhunthan@univ.jfn.ac.lk

*(கி.மு 4) இனங்காண முடிகிறது.புரிந்து கொள்ள முடியாததும் யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டதும் பகுத்தறிவால் நிரூபிக்கமுடியாதனவுமாகிய சில விடயங்களை விவரிப்பதற்கான தலைமுறைக் கையளிப்பாக இத்தொன்மங்கள் அமைந்தன (*Sushi, Gene, 2009, p.76*).*

*தொன்மங்கள் யாரால் உருவாக்கப்பட்டன? எப்பொழுது உருவாகின? என்பது போன்ற வினாக்களுக்குப் பதில்கள் இல்லை. அவை குறித்த சமூகத்தின் கூட்டு மனப்பதிவாகவே கருதப்படுகின்றன. இவை பெரும்பாலும் புனிதமான வாய்மொழி விவரணங்களாகவே பரிமாறப்படுகின்றன. இத்தகையதோர் பின்னணியிலிருந்தே வேதங்களில் இனங்காட்டப்பட்டுள்ள பிரபஞ்சத்தின் தோற்றம் குறித்த தொன்மங்களைப் புரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.*

*பிரபஞ்ச இயற்கை பற்றிய ஆச்சரியமும் அதன்வழியே விளைந்த காரண காரியச் சிந்தனாமுறைமையுமே தத்துவ ஆராய்ச்சிகளுக்கும் அறிவியற் கோட்பாடுகளின் முகிழ்ப்புக்கும் வித்திட்டன எனின் இவற்றின் ஆதிமூலத்தை தொன்மங்களிலிருந்தே தேடவேண்டும்.*

*உலகின் மூத்த நாகரிகங்களில் கட்டமைக்கப்பட்ட தொன்மங்கள் பலவும் பேசவந்த விடயம் பிரபஞ்சத்தின் சிருடியும் அதன் கட்டமைப்பும் குறித்த ஆச்சரியத்தின் அர்த்தபுஷ்டிகளையே ஆகும். கடவுளைப் பற்றிய தொன்மங்கள் இல்லாத நாகரிகங்களைக் கூடச் சுட்ட இயலும். ஆனால் பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய தொன்மங்களைப் பேசாத பண்டைய நாகரிகங்களே இல்லையெனலாம்.*

### எகிப்தியத்தொன்மம்

*புராதன எகிப்திய நாகரிகத்தில் நியூற்* (Nuit), C[1] (Sibu) *என்ற பெண், ஆண் ஆற்றல்களால் பிரபஞ்சம் முட்டை* (Cosmic Egg) *வடிவில் நீரில் மிதந்ததாக விபரிக்கும் தொன்மம் உள்ளது. மேலும் நான்கு தூண்கள் விண்ணையும், மண்ணையும் பிரித்துள்ளதாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. இருளின் தேவதையாக நியூற் வர்ணிக்கப் பட்டுள்ளாள்* (Veronica, Ions, 1983, p24).

### பபிலோனியத் தொன்மம்

*பபிலோனியர்களிடமும் அப்சு* (Apsu) *திமேற்* (Tiamet) *என்ற ஆண், பெண் ஆற்றல்களால் பிரபஞ்சம் முட்டை வடிவில் வெளிப்பட்ட ஐதீகம் பேசப்பட்டுள்ளது. 'அப்சு' பிரபஞ்சத்தை நிறைத்துள்ள சமுத்திரரூபம் கொண்டவன்; அமைதியானவன். திமேற் ஆக்கிரோசமான பெண்தேவதை. இவளே புயல்களின் காரணி.* (TheBabylonianMythofCreation, <http://www.wisdomlib.org/mesopotamian/book/myths-and-legends-of-babylonia-and> assyria/d/doc7162.html)

### ஹீப்று தொன்மம்

*எல்லையற்ற சமுத்திரத்தினால் பிரபஞ்சம் சூழப்பட்டிருப்பதாகவும் கிண்ணமொன்றைத் தலைகீழாகக் கவிழ்த்தது போன்று வானம் அமையப்பெற்று சமுத்திரத்தின் நீர் உட்பிரவேசிக்காது தடுப்பாயமைந்து விளங்குவதாயும் ஹீப்று தொன்மம் விபரித் துள்ளது. மேலும் தட்டையான நிலப்பரப்புஇ தூண்கள் தாங்குவதுஇ நீதர் உலகம் எனப்பட்ட இருண்ட பாதாளலோகம் (*Netherworld*)) ஆகியவை பற்றியும் இத்தொன்மம் குறிப்பிட்டுள்ளது* (http://faith-seeking-understanding.org/tag/hebrew-cosmology).

### கிரேக்கத் தொன்மம்

*பண்டைய கிரேக்கத்தில் யூரிநோம் (*Eurynome*) எனப்பட்ட ஆதித்தாய் நிர்வாணமாக இருளும் குழப்பங்களும் சூழ்ந்த ஒரு நிலையில் சமுத்திரத்திலும், வானத்திலுமாக தனது இரண்டு பாதங்களையும் ஊன்றி நடனமிட்டதாகவும் அந்நடன அசைவுகளில் "*Ophion*" என்ற பெரிய பாம்புருவ ஆண் தோன்றி அவளைப் புணர்ந்தபோது பிரபஞ்சம் முட்டை வடிவில் வெளிப்பட்டதாகவும் கருதப்படுகிறது. வெள்ளி முட்டையாக பிரபஞ்சம் அறியப்படுகிறது (*Robert, 1992, p.18).

### சீனத் தொன்மம்

*சீனத் தொன்மமான பான்கூ (றியபெர)*

இருள்மயமான ஆரம்பத்தில் பான்கூ என்ற தூங்கும் அரக்கன் பிரபஞ்சத்தை முட்டையாக வெளிப்படுத்தியதாக விபரிக்கிறது. பின்னரே 'யின்' (Yin), 'யாங; (Yang) இன்ற இரண்டு எதிர் எதிர் ஆற்றல்கள் அம்முட்டையிலிருந்து வெளிப்பட்டுப் பிரபஞ்ச இயற்கையின் அனைத்தையும் நிறுவியதாக அறியப்படுகிறது. பிறிதொரு சீனத்தொன்மமான "நூவா" வானத்துக்கும், பூமிக்கும் இடையில் தூண்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக விவரிக்கிறது (PanGu, Myths ,Encyclopedia Myths and Legends of the world, http://www.mythencyclopedia.com/Pa-Pr/Pan-Gu.html#b)

### வேதங்கள்

மத்திய ஆசியாவில் இருந்து ஈரானுக்கும் அங்கிருந்து இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறக் கணவாய்கள்இ ஆற்றோரங்கள் மூலமாகப் பஞ்சாப்பை அண்டிய பகுதிகளிலும் குடியேறிய ஆரியர்கள் மொஹஞ்சதாரோ ஹரப்பா கலாசாரத்தின் அழிவைத் தொடர்ந்து வேதகால நாகரிகத்தைக் கட்டியெழுப்பினர்.

ஆரியர்களின் இந்தப் புலப்பெயர்வானது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நடைபெற்றிலது. தொல்லியல்இ இலக்கியம்இ மொழியியற் சான்றுகளைச் சீர்தூக்கி நோக்கும்போது இப்புலப்பெயர்வு கி. மு. 2000 தொடக்கம் சில நூற்றாண்டுகளாக இந்தியாவை நோக்கி அலை அலையாக இடம்பெற்றது என்பது உறுதியாகிறது. எவ்வாறாயினும் இந்தியாவுக்குள் வேதகால ஆரியரின் முதலாவதும் ஸ்திரமானதுமான குடியேற்றம் கி. மு. 1500 அளவிலேயே அமையப் பெற்றது. (Chatterji, S.K:1960:18 - 19).

இக்காலப்பகுதியிலேயே வேதகால மக்களின் சமூகபண்பாட்டுவிழுமியங்களையும் வழிபாட்டு முறைகளையும் செம்மையாக வெளிப்படுத்திய ரிக்வேதத்தின் உருவாக்கம் நிகழ்கிறது. (கி. மு. 1500 கி. மு. 1000) ரிக்வேதம் தோற்றம் பெற்ற காலமே முந்திய வேதகாலம் அல்லது வேதகால முற்பகுதியெனவும் ஏனைய மூன்று வேதங்கள்இ பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிஷதங்கள் தோற்றம் பெற்ற காலத்தைப் பிந்திய வேதகாலம் அல்லது வேதகாலத்தின் பிற்பகுதி என்றும் வரலாற்றாசிரியர்கள் கொள்வர் (சிவசாமி, 2011, 37).

ரிக்வேதகாலம் மற்றும் பிந்திய வேதகாலம் ஆகியவற்றின் காலகட்ட வரையறைகளில் வரலாற்றாசிரியர்கள் மத்தியில் சில முரண்பாடுகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் ரிக்வேதகாலத்தின் பின்எல்லை கி. மு. 1000 என்பதில் பிரபல்யமான வரலாற்று மற்றும் மொழியியல்சார் ஆய்வாளர்களிடையே கருத்தொற்றுமையுள்ளது.

வேதகால மக்கள் ஆரம்ப நிலையில் இயற்கையினையும் அதன் செயற்பாடுகளையும் கண்டு வியப்புற்றனர். இயற்கையின் மாறுதல்களினால் ஏற்படும் துன்பங்கள்இ இயற்கையின் சீற்றம் காரணமாக ஏற்படுகின்றதென எண்ணினர். காற்றுவீசுதல் சூரிய சந்திரர் உதிக்கும் ஒழுங்குமுறை வானில் தெரியும் நட்சத்திரங்கள் ஆறுகளின் பெருக்கம் சமுத்திர நீர்மட்டம் ஒரு நிலையிற் பேணப்படுதல் இடி மின்னல் முதலிய இயற்கை நிகழ்ச்சிகள் பிரபஞ்ச இயற்கையின் மீது ஒருவித ஆச்சரியத்தையும் அச்சவுணர்வையும் இவர்களிடம் ஏற்படுத்தின. இவையே பிரபஞ்சம் பற்றிய ரகசியங்களைத் தேடி வேத கால மனிதன் பயணித்தமைக்குப் பிரதான காரணமாகும்.

### படைப்புப் பற்றிய பாடல்
### (Song of Creation)

பிரபஞ்சத்தின் தோற்றுவாய்க்கான காரணத்தினைத் தேட முற்பட்ட வேதகால மக்களின் முதல்நிலை முயற்சியாகப் "படைப்புப் பற்றிய பாடல்" என அறிஞர்களால் சுட்டப்படும் ரிக்வேத நாசதீய சூக்தம் அமைகிறது. பிரபஞ்ச இயற்கையினை அச்சத்துடனும் ஆச்சரியத்துடனும் நோக்கி முற்றுமுழுதாகத் தெய்வீக நிலைப்படுத்தி வணங்க முற்பட்ட நிலையிலிருந்து கடைந்தேறிய போக்கை இப்பாடற் பகுதி உணர்த்துவதாயுள்ளது. ஓரளவிற்கு பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கும் அதன் இருப்புக்குமான காரணநிலைப்பட்ட ஆராய்ச்சியை இப்பாடற்பகுதி முன்னிறுத்துகிறது.

"அப்பொழுது ஒன்றுமில்லாத துமாக இல்லை. அது உண்மையான தாகவுமில்லை. நுழையமுடியாததும் மிக ஆழமானதுமான நீர் இருந்ததா? பிரபஞ் சமானது முதலில் படைக்கப்பட்டது. நடுவிலா கீழாகவா மேலாகவா? பூதங்களின் படைப்பிற்குப் பின்பு தேவர்களின் படைப்பு எதிலிருந்து இப்படைப்பு உண்டாயிற்றுஇ எதிலிருந்து இப்பல்வகைப் படைப்பு உண்டாயிற்றோ அது பிரபஞ்சத்தைத் தாங்கி நிற்கின்றதா"(ரிக்வேதம் 10.190.1)

என நீண்டு செல்வதாக அப்பாடல் அமைந்துள்ளது

### பிரபஞ்ச சாகரத் தொன்மம்
### (Cosmic Ocean Myth)

பிரபஞ்சத்தின் வற்றாத ஊற்றாகவும் பிரபஞ்சத்தை தாங்கி வெளிப்படுத்தியதாயும் கருதப்பட்ட பிரபஞ்சசாகரம் (Cosmic Ocean) வேதப்பாடல்களில் 'ஆர்னவ', 'சலீல' ஆகிய சொற்பதங்களால் சுட்டப்பட்டுள்ளது. (அதர்வவேதம் 10.2.7, 8.3440). இதுவே பிரபஞ்சம் தோன்றுமுன் இருந்த வடிவமற்ற எல்லையற்ற முதிராத ஆற்றலாக இருத்தல் வேண்டும்.

ஆரம்பநிலையில் எழுச்சி பெறுகின்ற பிரபஞ்சத்தின் குறியீடாக (பிரபஞ்சம் என்பது சூரியனையும் பூமியையும் முதன்மைப் படுத்திய அளவிலேயே இருந்தது) "தாமரை" பற்றிய தொன்மமொன்று வேத இலக்கியங்களில் அடையாளங்காணப்படுகிறது. மைத்திரேய சம்ஹிதை மற்றும் கடசம்ஹிதை ஆகியவற்றில் இதற்கான சான்றுகள் இடம்பெற்றுள்ளன.

"ஆரம்பத்தில் நீரே எல்லாமாக இருந்தது. அசைகின்ற சமுத்திரத்தில்இ பிரஜாபதி காற்றாக உருமாறி ஒரு தாமரை இலையின்மேல் இமர்ந்து நீர்ப்பரப்பில் அலைந்தார். அவரால் சிருஷ்டிக்கு ஏதுவாக எந்தவிதமான பிடிமானத்தையும் தேடிக்கொள்ள முடியவில்லை. அவர் நீரின் திரட்சியைக் கண்டார். அதன்மேல் அவர் நெருப்பினை வளர்க்க அது பூமியாக மாறியது"

இவ்விவரணப்பகுதியில் படைப்பிற்கு முந்தியநிலை என்பது சுயாதீனமாக இருந்தநிலை அதாவது வரையறைகள் பிடிமானங்கள் ஏதுமற்று இருந்த நிலை என்பதனை பிரஜாபதியின் நிலை உணர்த்துகிறது. இது ஆதாரமற்ற நிராதர நிலையாகும்.

"நீரின் திரட்சி" என்பதன் மூலம் அங்கே ஒரு பிடிமானத் தன்மை ஒருவித திண்மத்தன்மையின் தொடக்கநிலை உணர்த்தப்படுவதாகக் கருதலாம். இங்கே "திரட்சி" என்பது ஒரு கூட்டு நிலையைக் குறிப்பதாகவும் கருத இயலும். ரிக்வேதத்தில் இடம்பெறும்.

"பாராபட்சம் பார்க்காத வெள்ளப் பெருக்கே இருந்தது" (x.129.3) என்கிற குறிப்பும்

"உலகம் முழுவதையும் கருவாகத்தரித்து அக்கினி தேவனை உருவாக்கிய உயர்ந்த நீர்ப்பரப்புகள்" (ரிக்வேதம் x.17.10, i.23.6, Vi.50.7 என்கிற விவரிப்பும் பிரபஞ்சத்திற்கு ஆதிகாரணமாக நீரை முன் வைத்துள்ளன.

மேலும் ரிக்வேதத்தில் இடம்பெற்றுள்ள ஒரு துதிப்பாடலில் (ஓ.82.5)

"விண்ணுக்கும் மண்ணுக்கும் அப்பாலாய் தேவ அசுரர்களுக்கும் அப்பாலாய் இந்த உலகத்தின் இரட்டைத்தன்மைக்கு அப்பாலாய்இ நீரினால் கர்ப்பமாகத் தரிக்கப்பட்டதும் கடவுளர் தங்களைத் தாங்கள் கண்டு கொண்டதும் எதில்"

என்று வினாவும் பகுதி இடம்பெற்றுள்ளது. இதேபோன்ற விவரிப்புக்கள் அதர்வவேதத்திலும் காணப்படுகின்றன. அதர்வவேதம் iV.2.6, .2.8, .1.8.

யசுர்வேதத்துக்குரிய சதபதப் பிராமணத்தில் இடம்பெறும் ஆபஹ(யியா) என்ற சிலேடையான சொற்பதம் தெய்வீக மனைவிமார் என்றும் நீர் என்றும் பொருள்படும் விதத்தில் அமைந்துள்ளது.

பிரபஞ்சத்தைப் பிரசவித்த நீரே தெய்வீக மனைவிமார் என்றும் பொருள் விளக்கம் கொள்ளத்தக்கதாக இத்தொடர் அமைக்கப்பட்டுள்ளது. "ஆபஹ" என்கிற

பெண்பாற் பன்மைச் சொல் மூலமாக பிரபஞ்சத்தினைப் பிரசவித்தலால் நீரும் தெய்வீக மனைவிமாரும் ஒரு தளத்தில் வைத்து நோக்கப்படும் பாங்கு அமையப்பெறுகிறது.

பிரபஞ்ச மூலமாகவும் பல்வேறு உலகங்களுக்கும் ஸ்தானமாகவும் நீரே அமைந்ததால் பிராமண இலக்கியங்களில் "பிரதி~;டா" என்ற பதத்தினாலும் நீர் குறிப்பிடப்படுகிறது. (சதபதப்பிராமணம், Vi.7.17, Vi.8.22, Vii.4.1.8.,தைத்திரேயப்பிராமணம் iii.6.4.)

## உறைவுக் கருத்தாக்கம் (Process of coagulation)

வைதீக இலக்கியங்களில்; "பிரபஞ்சம்" என்பது பூமியை முன்னிலைப்படுத்திய கருத்தாக்கமாக இடம்பெற்றுள்ளது. பூமியை முன்னிறுத்திய பிரபஞ்சவியல் சார்ந்த கருத்தாக்கங்களில் "உறைவுக் கருத்தாக்கம்;"(Process of coagulation) என்பதும் ஒன்றாகும். இக்கருத்தாக்கமானது உலக அரங்கில் செமித்தியத் தொன்மங்களிலும் காணப்படுகிறது. பூமியானது நீர்ப்பரப்பிலிருந்து ஒருவித உறைவுநடைமுறை மூலமாகத் தோற்றமுற்றது என்பதே இதன் எளிமையான விளக்கம் ஆகும். இதனை வைதீக இலக்கிய மரபில் தெளிவாக அவதானிக்க முடிகிறது. ஜைமினிய பிராமணம் (iii.360.ii), பிருஹதாரண்ய உபநிடதம் (1.2.2) இ மற்றும் ஐதரேய உபநிடதம் (1.3) ஆகியவற்றில் இதுபற்றித் தெளிவான குறிப்புக்கள் உள்ளன.

## திரள்வுக் கருத்தாக்கம் (churning of the Ocean)

உறைவுக் கருத்தாக்கத்திற்கு மாற்றீடான கருத்தாக்கமாக திரள்வுக் கருத்தாக்கம் திகழ்கிறது (churning of the Ocean) இதுவே புராணங்களில் விரிவாகப் பேசப்படுகின்ற பாற்கடல் கடைதல் பற்றிய செய்திகளுடன் இயைபுற்று வந்தது. எவ்வாறாயினும் திரள்வுக் கருத்தாக்கத்தின் மூலத்தை வைதீக இலக்கிய மரபில் இனங்காண முடியும். அந்த வகையில் தேவர்கள் கைகோர்த்து "ஆழிநர்த்தனம்" புரிந்ததாக ரிக்வேதத்தில் (X.72.6) இடம்பெற்றுள்ள குறிப்பினை இதற்குச் சான்றாகக் குறிப்பிட முடியும். மேலும் திரள்வுக் கருத்தாக்கத்தின் இன்னொரு பரிமாணமாக பிரபஞ்ச முட்டை அல்லது முண்டன முட்டை என வேதங்களில் குறிப்பிடப்படும் தொன்மம் அமைகிறது.

## முண்டன முட்டைத் தொன்மம்

வைதீக இலக்கிய மரபில் பிரபஞ்சவியலுடன் தொடர்புடைய புகழ்பெற்ற தொன்மமாக விளங்குவது "முண்டன முட்டை" எனச் சுட்டப்படும் பிரபஞ்சமுட்டை (Cosmic Egg) பற்றிய கருத்தியலாகும். நீர்ப்பரப்பில் இருந்து திரண்டு கிளம்பிய முட்டையொன்று பிரபஞ்சத்தைப் பிரசவித்தது என்பதே இதன் அடிப்படை விளக்கமாகும்.

> "ஆரம்பத்தில் நீர்மட்டுமே இருந்தது. அதன் பேரலைகள் ஒன்றுடன் ஒன்று மோதியதன் விளைவாக ஒரு பொன்முட்டை உருவாகியது. தேவர்களின் நூறுவருட காலத்துக்கு அது அங்கேயே இருந்தது பின் அது பிரபஞ்சத்தை உற்பவித்தது" (ஜைமினிய பிராமணம் iii.36.7).

> "நீர்நிலைகள் தமக்குத்தாமே புகழைப்பெருக்க விரும்பியதால் உருவான வெப்பத்திலிருந்து பொன்முட்டை தோன்றியது. இது சுமார் ஒரு வருடகாலம் மிதந்து கொண்டிருக்க பிரிக்கப்படாதிருந்த ஆரம்பப் பிரபஞ்சத்தின் கடவுளாகிய பிரஜாபதி தோன்றினார். அவர் அம்முட்டையினைத் திறந்து பார்த்தபொழுது அதற்குள் அடிப்படையான எதுவும் இல்லை. அவர் அந்த முட்டையின்மீது ஒரு வருடம் மிதந்து பின்னர் பூமியையும் வளிமண்டலத்தையும் ஆகாயத்தையும் சிருஷ்டித்தார்" (சதபதப்பிராமணம் Xi.1.6.12)".

சாந்தோக்கிய உபநிடதத்தில் முட்டை என்பதற்குப் பிரதியீடாக "ஒரு கரு" என்ற கருத்துக் கூறப்படுகிறது.

> "முதலில் உருவமற்ற கருவொன்று இருந்தது. அது உடைபடுவதற்கு முன்பு

> ஒருவருடகாலம் அப்படியே கிடந்தது. பின்னர் அது வெள்ளியினாலும் தங்கத்தினாலும் ஆன இரண்டு ஓடுகளாக மாறியது. வேள்ளி ஓடு பூமியாகவும் தங்க ஓடு சுவர்க்கமாகவும் மாறியது” (சாந்தோக்கிய உபநிடதம் iii.19.1).

இவ்விவரணப் பகுதியானது தொடர்ந்து நரம்புகள் கர்ப்பப்பையின் உட்பகுதிஇ வெளிப்பகுதி ஆகியவை பற்றியும் வர்ணித்துள்ளது. இது உயிரினங்களின் தோற்றம் பற்றிய குறியீடாக அமைந்திருக்க வாய்ப்புண்டு. பிரபஞ்ச முட்டை பற்றி கருத்தியலின் மூலத்தை ரிக்வேதசங்கிதையில் இடம்பெறும் ஹிரண்ய கர்ப்பம் (பொற்கரு) பற்றிய குறிப்பில் அடையாளங்காண முடிகிறது (ரிக்வேதம் X.121.1).

உலகிலே இருக்கக்கூடிய அனைத்துக்கும் அதிபதியாகவும் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆதாரமாகவும் கருதப்பட்ட ஹிரண்யகர்ப்பன் குறித்து ரிக்வேதத்தில் பேசப்பட்ட விடயங்கள் தெளிவற்றவையாக இருப்பினும் அவை பிரபஞ்சவியலுடன் தொடர்புடைய “பொன்முட்டை” குறித்த கருத்தியலுக்கு அடிப்படை என்பதில் ஐயமில்லை. இக்கருத்தியல் பிற்காலத்தில் இதிகாசங்கள் மற்றும் மகாபுராணங்களில் விரிவாக எடுத்தாளப்பட்டுள்ளமையும் நோக்கற்பாலது.

> “இது ஆரம்பத்தில் நீர்ப்பிரவாகமாக இருந்தது ஆனால் ஒரு அலையானது இன்னொரு அலைமீது மோதி அதிலிருந்து இரண்டு பொற்கிண்ணங்கள் தோன்றின”.

என்ற விவரணத்தையும் ஜைமினிய பிராமணம் குறிப்பிடுகின்ற பொன்முட்டையுடன் சில ஆய்வாளர்கள் தொடர்புபடுத்துவர்.

### வராஹத் தொன்மம்

பிரபஞ்சத்தின் தோற்றத்துடன் தொடர்புடைய இந்துக்களின் தொன்மங்களில் காட்டுப் பன்றித் (வராஹ) தொன்மமும் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. பிற்காலத்தில் விஷ்ணுவின் வராஹ அவதாரத்துடன் தொடர்புபட்டுப் பௌராணிக இலக்கியங்களில் இத்தொன்மம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

ஆயினும் இதன் மூலத்தை வேத இலக்கியங்களில் அடையாளங்காண முடிகிறது. நீரடியிலிருந்து காட்டுப் பன்றி கிளம்பிச் சேற்றைக் கொணர்ந்தது. அந்தச் சகதியே பிரபஞ்சத்திற்கு மூலமாயிற்று. ஆரம்பத்தில் பன்றியின் கொம்பளவில் சிறிதாக படிந்திருந்த சகதியானது அது நீருக்கு மேல் மிதந்து கொண்டிருக்கும்போது பிரம்மாண்டமாக வளர ஆரம்பித்தது என அமைகின்ற விவரணப் பகுதியானது யசுர்வேதத்திற்குரிய பல்வேறு பிரிவுப் பனுவல்களிலும் இடம்பெற்றுள்ளது. (மைத்திரேய சம்ஹிதை *1.6.3*, தைத்திரேய சம்ஹிதை VII.*1.5.1*, தைத்திரேய பிராமணம் *1.2.1.3*, தைத்திரேய ஆரண்யகம் X.*1.8.*)

யாகங்களுக்கு அதிகமுக்கியத்துவம் வழங்குகின்ற யசுர்வேதத்தில் ஓமத்தீயை வளர்க்கின்ற எவரும் வராஹத்தினால் தோண்டப்பட்ட அந்த மண்ணில் சிறிதளவை ஓமத்தீயின் அடியில் இடவேண்டும் என்ற விளக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தொன்மக்கதை இடம்பெற்றுள்ளது.

மேலும் யசுர்வேதமானது பிரஜாபதியே வராஹ வடிவமெடுத்தார் என்கிற கருத்தமைவையும் பதிவுசெய்துள்ளது. சிரு~;டி கர்த்தாவாகிய பிரஜாபதி காற்றுவடிவில் நீருக்குள் பாய்கிறார். பின்னர் காட்டுப்பன்றியின் உருவத்தில் அவர் பூமியின் ஆரம்பத்தினை நீரின் மேற்புறத்துக்குக் கொண்டு வருகிறார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யசுர்வேதத்துக்குரியதான சதபதப் பிராமணத்தில் பிரபஞ்ச சிரு~;டியுடன் தொடர்புபட்ட இவ்வராஹத்துக்கு “ஸ்%~லீ” என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. (சதபதப் பிராமணம் XIV.*1.2.11*)

ஆயினும் மைத்ரேய சம்ஹிதையில் பிஜாபதி இத்தகைய பிரபஞ்சத்தினை வெளிப்படுத்திய வராஹத்தோடு தொடர்புபடுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் பிற்காலத்தில் காளிதாசர்

தனது இரகுவம்சத்தில் குறிப்பிட்டதைப் போன்று "ஆதிவராஹமாக" மாத்திரமே சுட்டப்பட்டிருந்தது.

பிரபஞ்சவியலுடன் தொடர்புடையதாகக் காட்டுப்பன்றியினைச் சுட்டுகின்ற குறிப்புக்கள் அதர்வவேத்திலும் ஆங்காங்கே இடம்பெற்றிருந்தன. (அதர்வவேதம் II.27.2,V.14.1)

## ஆதிமலை மலைத்தொன்மம் (Primordial Hill))

பிரபஞ்சத்தின் அச்சு என்றும்இ மையம் என்றும் தாங்கும் சக்தி என்றும் கருதப்பட்ட மந்தர மலை குறித்த விவரணங்கள் இந்துக்களின் பிரபஞ்சவியல் குறித்த ஐதீகங்களில் கவனத்திற்குரியதாகும். மகாபுராணங்களில் இது பற்றி விரிவான குறிப்புக்கள் இடம்பெற்றிருப்பினும் வேத இலக்கியங்களில் இதன் மூலச்சுவடுகளை இனங்காண முடிகிறது.

வேத இலக்கியங்களில் பூமியும் மலைகளும் ஆரம்பநிலையில் இந்திரன் அவற்றை ஸ்திரநிலைப்படுத்தும் வரையில் அங்குமிங்கும் அலைந்தபடி இருந்தன என்றும் அவற்றுக்கு ஒரு உறுதியான பற்றுக்கோடு கிடைக்கவில்லை என்றும் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இந்திரனைப் போற்றுகின்ற பாடல்களில் இதுபற்றி அறியமுடிகிறது.

> "மனிதர்களே பரந்த உலகமானது நடுங்கிக்கொண்டிருந்தபோது யார் அதனை ஸ்திரமுடையதாக்கினாரோ கிளர்ந்துகொண்டிருந்த மலைகளை யார் அமைதிப்படுத்தினாரோ யார்காற்றின் இடைப்பகுதியினை மேலும் அகன்ற விதத்தில் அளந்தாரோ யார் ஆகாயத்தினை உறுதியாக்கினாரோ அவரே இந்திரன்" (ரிக்வேதம்.ii.12.2).

> "பூமி சமமான விதத்தில் விரிவடைந்துள்ளது. ஓடிவிட விரும்பிய மலையும் அடங்கிவிட்டது. மலை கவனமாக நிலைபெற்றுவிட்டது (ரிக்வேதம்.ii.11.7.8).

> "மலைகள் ஈக்களைப்போல உட்கார்ந்து விட்டன. வல்லமை மிக்கவரே" (ரிக்வேதம்.V.I.30.3)

> நடுங்கிய மலைகளையும் சமவெளி களையும் அவர் நிலைநிறுத்தினார்" (ரிக்வேதம்.ஙீ.44.8)

பிராமணங்களோ இந்த ரிக்வேத மலைத் தொன்மத்தை உள்வாங்கித் தமது மேலான தெய்வமாகிய பிரஜாபதியுடன் தொடர்புபடுத்தி வெளிப்படுத்தின.

> "உண்மையில் மலைகளே பிரஜாபதியின் முதல் வாரிசுகளாக இருந்தன. அவற்றுக்குச் சிறகுகள் காணப்பட்டன. அவை தாம் விரும்பியவாறு அண்டவெளியில் பறந்து திரிந்துகொண்டிருந்தன. இந்தத் தருணத்தில் பூமி ஸ்திரப்படவில்லை. அது மிக மிக இளகியதாக இருந்தது. இந்திரன் மலைகளின் சிறகுகளை அறுத்து பூமியில் அவற்றை நிலைநிறுத்தினான். இதன்மூலம் நிலவுலகத்தை அவன் ஸ்திரப்படுத்தினான். இந்திரனால் அறுக்கப்பட்ட சிறகுகள் இடிமுகில்களாக மாறின. எனவேதான் அவை எப்போதும் ஏதாவது ஒரு மலையினை நாடியே நகர்கின்றன. ஏனெனில் அதுவே அவற்றின் ஆரம்ப ஸ்தானமாக இருந்தது" (மைத்திரேய சம்ஹிதை I.10.13)

> "நீ உறுதியானவன் நீயே இப்பூமியை ஸ்திரப்படுத்துவாய்" (வாஜசனேயி சம்ஹிதை 1.17).

யசுர்வேதத்துக்குரிய புகழ்பெற்ற பிராமணமாகிய சதபதப்பிராமணத்தில் பூமியின் தோற்றம் பற்றிய விவரணம் ஒன்று மேல்வருமாறு காணப்படுகிறது.

"பின்னர் அவன் உருளைக்கற்களைக் கொண்டு வருகிறான். அப்பொழுது முன்னொரு காலத்தில் மேலதிகாரத்துக்காகப் போட்டியிட்ட பிரஜாபதியிலிருந்து தேவர்களும் அசுரர்களும் உருவாகினர். இந்த நிலவுலகமானது ஒரு தாமரை இலையினைப் போல நடுங்கிக் கொண்டிருந்தது. ஏனெனில்

காற்று அதனை அங்குமிங்குமாகத் தள்ளியபடி இருந்தது. தேவர்களுக்குச் சமீபமாக ஒருமுறையும் அசுரர்களுக்குச் சமீபமாக ஒருமுறையும் என மாறிமாறி நிலவுலகம் ஊசலாடிக்கொண்டிருந்தது. தேவர்களுக்கு சமீபமாக அது வந்த ஒரு சந்தர்ப்பத்தின் போது நாங்கள் இளைப்பாறும் இந்த நிலவுலகத்தினை நாங்கள் ஸ்திரப்படுத்துவோம் என்று கூறினார்கள். அது ஸ்திரத்தன்மை பெற்றது. பின்னர் அதன் இரு இடங்களில் தீயை வளர்த்தார்கள். ஒரு தோலை எவ்வாறு ஒருவர் மரக்குச்சிகளைக் கொண்டு இழுத்து நீளமாக்குவாரோ அதே முறையில் அந்த இளைப்பாறுமிடத்தினை மலைகளை நிறுத்தி ஸ்திரப்படுத்தினார்கள். அது ஒரு உறுதியான நிலையான இளைப்பாறுமிடமாக மாறியது". (சதபதப்பிராமாணம் II.1.1.8-10 Trans. Eggeling))

இவ்வாறாக பிரபஞ்சத் தோற்றத்துடன் தொடர்புடைய வகையில் இம்மலைத் தொன்மம் முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ளது. Ancient Indian Cosmogony என்ற பனுவலில் F.B.T.Kuiper என்பவர் வேதகாலப் பிரபஞ்சவியலில் "மலை" பெறுகின்ற முக்கியத்துவத்தினை மேல்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "In the beginning there was only a small Hill, floating on the surface of the waters. From it the earth expanded in all frictions. By piercing this mountain, in which the germs of all life were contained, Indra at the same time made it firmly rooted in the bottom of the waters. Since this mountain was the cosmic center, the central point of the earth, the whole earth become thereby "firm and steady". Thus the cosmic mountain not only was the origin of the earth but also came to function as the "Pig" which secured the earth a firm support" (Kuiper,1983, pp.108-109).

"ஆதிமலையின் ஒரு சிறிய குன்று மட்டும் நீரின் மேற்பரப்பில் மிதந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து பூமி நாலாபக்கமும் விரிவடைகிறது. எல்லா ஜீவராசிகளினதும் உயிர் அணுக்கள் இந்தச் சிறிய மலைக்குன்றிலேயே அடக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்த மலையினைத் துளைத்த இந்திரன் அதனை நீருக்கடியில் நன்கு வேரூன்றவும் செய்கிறான். இந்த மலையே பிரபஞ்சத்தின் மையஸ்தானமாகவும் இருந்ததால் அதன் மூலம் முழுப் பூமியும் உறுதிபெற்று நிலைநிறுத்தப்படுகிறது. இவ்விதமாக பிரகஞ்ச மலையானது உலகின் ஆரம்பமாக இருந்தது மட்டுமல்லாமல் நிலவுலகிற்கு நிலையான ஆதாரத்தினை வழங்கிய தாங்கு பொருளாகவும் (றிநப) இருந்தது." என அர்த்தப்படுகிற அவ்விவரிப்பிற்குத் துணைசேர்க்கவல்ல சான்றுகள் பிந்திய இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மந்திரமலையானது இந்திரனுடைய தாங்கு சக்தி என அழைக்கப்படுவதோடு அதுவே பிரபஞ்சத்தின் "சுழலச்சு" என வர்ணிக்கப்படுகிறது.

**சுயாதீன தன்னுணர்வு**

பிரபஞ்ச இயற்கையில் நிகழ்ச்சிகளுமஇ நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி நிலையிலும் செயல்விளைவுகளிலும் ஒழுங்குமுறை அமையப்பெற்றிருப்பதற்கு காரணம் எங்கும் நிறைகின்ற ரித என்கிற ஒழுங்கமைப்பாகும்.

மேலும் சூரியன் தனக்குத் தானே ஆதாரமாக இருத்தலும்இ சுழல் காற்றின் போக்கும்இ வைகறைப் பொழுதின் புலப்பாட்டுச் சிறப்புகளும் "ஸ்வதா" எனப்படும் ஒரு உள்ளமைந்த ஆற்றலின் காரணமாக நிகழ்வன என்ற நம்பிக்கையும் நிலவியது. (ரிக்வேதம் 1.64.4, 4.13.5, 7.78.4) "ரிதம்", "ஸ்வாதா" என்ற இருவகைக் கருத்தியல்களும் பிரபஞ்ச இயற்கைக்கேயுரிய சுயாதீன தன்னுணர்வை அடையாளப்படுத்தும் சொற்பதங்களாகக் கருதமுடியும்.

"உள்பொருளோ இல்பொருளோ இல்லை காற்று துறக்கம் மறைப்பு புகலிடம் நீர் அளவிடற்கரிய ஆழம் இரவு பகல் பற்றி ஏதும் அறியப்படவில்லை. தன் உள்ளாந்த ஆற்றலாகிய "ஸ்வாதா" காற்று இல்லாமல் மூச்சுவிட்டது இவ்வாற்றலுக்கு அயலாக வேறு எதுவும் இல்லை" (ரிக்வேதம் 10.129.1)

இக்கருத்தமைவே பிற்காலத்தில் சாங்கியம் முதலிய தத்துவங்களில் பிரபஞ்சப் படைப்பில்

பிரகிருதியின் தன்னுணர்வு பற்றிய கருத்தாடல்களுக்கு அடிப்படையாயிற்றோ என எண்ணத் தோன்றுகிறது.

**பகுப்பாய்வு**

- உலகின் மூத்த நாகரிகங்கள் பலவற்றிலும் பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய சிந்தனைகள் தொன்மங்களாக கட்டுருவாக்கம் பெற்றிருந்தன.
- வேதங்களிலும் இவற்றுக்கு ஒத்திசைவான அனேக தொன்மங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ஹிரண்யகர்ப்பன், முண்டன முட்டை, படைப்புப் பற்றிய பாடல், பிரபஞ்ச சாகரம், ஆதிமலைத் தொன்மம், தூண் நிறுத்தப்பட்ட அமைப்பு போன்றவை வேதங்களிலும் பயின்று வந்துள்ளன.
- பெண் ஆற்றல்இ இருண்மை நிலை /குழப்பநிலை, முட்டை வடிவம், மலை, தூண்கள் நிறுத்தப்பட்ட அமைப்புஇ எல்லையற்ற நீர்ப்பரப்பு, ஆண் பெண் உறவு போன்ற பொதுத் தன்மைகள் பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய தொன்மங்கள் யாவற்றிலும் பொதுப்பண்புகளாக அடையாளங் காணப்பட்டுள்ளன.
- வரஹத்தொன்மம் வேதங்களுக்கே தனித்துவமானது. அதுபோல ஆண் பெண் உறவு அதிலும் “பெண்” முதன்மைப்பட்ட உறவுநிலைத் தொன்மங்களை வேதங்களில் அறிய முடியவில்லை. ஆரியர்களின் தந்தைவழிச் சமூகத்தின் கண்டிப்பான நியமங்களே இதற்குக் காரணமாய் இருக்கக்கூடும்.
- வேதங்களில் இடம்பெற்ற நீரின் திரள்வுநிலைக் கருத்தாக்கம்இ உறைவுக் கருத்தாக்கம் பற்றிய செய்திகளும் பிற நாகரிகங்களின் தொன்மங்களில் இடம்பெற்றிருக்காத சற்று முன்னேற்றகரமான அறிவியல் உந்துதலுடைய தொன்மங்களாகும். தொழில்முறைரீதியாகக் கால்நடை மேய்த்தலுடன் அதிகம் ஈடுபட்ட ஆரியர்களிடையே நிலவிய பாற்பொருட்களுடன் தொடர்புடைய தொழில்முறை அனுபவத்தின் செல்வாக்கே இத்தகைய தொன்மங்களின் உருவாக்கத்துக்க காரணமாக அமைந்திருக்கக் கூடும்.
- பிரபஞ்சம் எப்படி உருவானது என்பது குறித்த புனைவுகளே “கடவுள்” பற்றிய புனைவுகளுக்கும் கால்கோளிட்டன எனில் மிகையில்லை. வேதங்களில் இடம்பெற்றுள்ள பிரபஞ்சத்தின் தோற்றம் குறித்த தொன்மங்களே இதிகாச புராணங்களில் பெரும் விவரணங்களாக எடுத்தாளப்பட்டன. இதற்கு மிகப்பொருத்தமான உதாரணங்களாக ஆதிமலைத் தொன்மம், வராஹத்தொன்மம், மண்டனமுட்டைத் தொன்மம், பிரபஞ்சசாகரத் தொன்மம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## References


Chatterji, S.K.(1960),*Indo – Aryan and Hindi*, Gyan Books Pvt. Ltd. Delhi, India

Kuiper,F.B.J.,(1983),*Ancient Indian Cosmogony*,Vikas Publishing House,UP,India.

Leeming, David Adams (2010). *Creation Myths of the World*,Santa Barbaro: ABC- CLIO,Oxford

Norman Brown,W.,(1942),*The creation myths of the Rig Veda*, JAOS.

Robert, G., (1992),*The Greek Myths,Penguin Books*,London.

Sushi, M., Gene, T., (ed)(2009),*The Hindu World*,Roultledge Publishers,New York.

Veronica, Ions,(1983) ,*Egyptian Mythology*, P. Bedrick Books,NewYork.

Sivasamy, V. (2011). Ariyar Varalarum Panbadum. Columbu: Kumaran Publications.

Jambunathan, Ma, Ra,. (2006). Rig Yajur Sama Atharvana Vethangal. Chennai: Alaigal Publications.